**தலைப்பு 9 – நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நியாயசபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்ததாகவும்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதி செயலாற்றல் கூற்றில் வைப்புக் கொடுப்பனவுகளாக ரூபா 45,584 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதும் ஏசீஏ – 4 மாதிரியில் வைப்பு தொடர்பான எவ்வித பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் சரியான தகவல்களை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | சபையால் வைப்புக் கணக்கொன்று பராமரித்துச் செல்லப்படாமல் இருப்பதுடன் நிதி செயலாற்றல் கூற்றில் வைப்புக் கொடுப்பனவுகளாக ரூபா 45,584 தொகை சம்பளமற்ற லீவிற்காக அறவிடப்பட்டதாகும். அடுத்த கணக்குகளை சமர்ப்பிக்கும் போது சரியாக சமர்ப்பிக்க குறித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) நிதி செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ரூபா 611,400 தொகையான முற்பணம் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (இ) ஏனைய பெறுவனகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 438,428 தொகை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அடுத்த கணக்குகளை சமர்ப்பிக்கும் போது அதன் பிரகாரம் சமர்ப்பிக்க குறித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வருமானம் அல்லாத பெறுவனவாக ஏனைய பெறுவனகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 197,800 தொகை வருமான பெறுவனவின் கீழ் வரி வருமானமாகவும் ஏனையவை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். |

**1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி ரூபா 652,512 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது, அப்பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குழாமிலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி சரியாக் காண்பிக்கப்பட வேண்டும். | தவறுதலாக மீதிகள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசு பாய்ச்சலின் கீழ் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். |

**1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுட னான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | 2002 இன் 04 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை சட்டத்தின் 9(1) ஆம் பிரிவு | நியாயசபையின் தலைவரால் நியமிக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் முடிவடைந்ததன் பின்னர் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் வினவி ஒப்பந்த அடிப்படையில் வேறு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படடிருந்தனர். | நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிடம் வினவி தேவையான உத்தியோகத்தர்கள் மற்றம் ஊழியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். | உத்தியோகத்தர் களை சேர்த்துக் கொள்ளும் போது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிடம் வினவி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின்<br>நிதிப்பிரமாணம் 138(6) | 2019 யூலை மாதம் பாதுகாப்பு சேவையை வழங்கியதற்காகவும் ஆரோக்கிய சேவைகளை வழங்கியதற்காகவும் ரூபா 107,920 தொகை கொடுப்பனவின் போது சேவை வழங்கிய உத்தியோகத்தர்களின் வருகை பதிவேடு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்ளுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 138(6) இன் பிரகாரம் சான்றுறுதி செய்தல் தொடர்பான கோவைகள் தொடர்புகள் குறிப்பிடப்பட்டவை கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்ளுடன் இணைக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றென. |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2019 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களின் அலுவலகத்திற்கு வருகை மற்றும் வெளியேறலை உறுதிப் படுத்துவதற்காக கைவிரலடையால இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கைவிரலடையால இயந்திரம் செயலற்று காணப்பட்ட காரணத்தினால் அதனை திருத்தி பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 2020 ஏப்ரல் 20 மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்படுத்தவுதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் கொவிட் 19 வைரஸினால் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதாலும் நிறுவனத்தை மூடியமையாலும் இதுவரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது. |
| (ii) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 3 பதவிகளுக்காக மூன்று உத்தியோகத்தர்களும் 4 பதவிகளுக்காக 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 4 உத்தியோகத்தர்களுமாக 7 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர் களை சேர்த்துக் கொள்ளும் நடைமுறையொன்றை தயாரிப்பதற்கும் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனினும நடவடிக்கைகள் தொடர்ச்சியாக செய்வதற்கு ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ள நேர்ந்தது. |
| (ஈ) | 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | அலுவலக உபகரணங்கள்கொள்வனவு இடைநிறுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.ன் போது | 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திறைசேரியிடம் இருந்து எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளதுடன் அத்தொகை நியாயசபைக்கு கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் 3 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் பொதுத்திறைசெரியிடமிருந்து எவ்வித எதிர்ப்பும் முன்வைக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடு விளைவற்றிருத்தல்** | | |
| 2002 ஆம் இலக்க இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் செலவின விடயத்தின் ரூபா 250,000 ஆன முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | உள்ளக தொலைபேசி முறைமையொன்றை நிறுவுவதற்கு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் இலங்கை டெலிகொம் இடமிருந்து அதனை நிறைவேற்றுவதற்கு முடியாமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 பெறுகைகள்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவை உடன்படிக்கை காலம் முடிவடைவதற்கு முன்னர் பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டு உரிய காலத்தில் சேவை வழங்குவதற்காக நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் உருவாகாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். |

## 4. மனித வளமுகாமைத்ததுவம்

---

நியாயசபையால் சமர்ப்பிக்கப்படட தகவல்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு சிரேஷ்ட மட்ட பதவிகளும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்ததுடன் 4 மூன்றாம் தர பதவிகளில் 3 உம், இரண்டாம் தர பதவியில் 3 பதவிகளும், ஆரம்ப மட்டப் பதவிகள் 2 உம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அங்ககீகரிக்கப்பட்ட 31 பதவிகளில் 20 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.